**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**
**CC No.533 /2025**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/ Pw1 |
| Name | : Gangatharan |
| Father/Husband's Name | : Duraisamy |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026.

**Accused absent.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.10.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் செங்கல்பட்டு தாலுக்கா காவல்நிலையத்தில் பணியிலிருந்தபோது, ரோந்து பணியாக நானும், உதவி ஆய்வாளர் சங்கர், நாகராஜ் காவலர் ஆகியோர்களுடன் ரோந்து பணியாக மதுவிலக்கு மற்றும் கஞ்சா வேட்டையாக ஒழலூர் கிராம ஏரிக்கரை ஓரம் இருக்கும் பொது கழிப்பிடம் அருகே சென்ற போது, மேற்சொன்ன உதவி ஆய்வாளர் அவர்களுக்கு ரகசிய தகவல் கிடைத்ததின் பேரில், காலை 11.00 மணியளவில் சோதனைக்கான உபகரணங்களை எடுத்து கொண்டு, ஒழலூர் கிராம ஏரிக்கரை ஓரம் இருக்கும் பொது கழிப்பிடம் அருகே கண்காணித்த போது, ஒரு ஆண் நபர் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை என்னை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை நாங்கள் மடக்கி பிடித்து விசாரித்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை பின்னர் தன் பெயர் அசோக்குமார் த.பெ. ரமேஷ் என்றும், ஒழலூர் கிராமத்தை சேர்ந்தவர் என்று கூறியவரை பிடித்து விசாரணை செய்தோம். பின்னர், மேற்படி, எதிரியிடம் உதவி ஆய்வாளர் உங்களை சோதனை செய்வதற்கு சாட்சிகளாக குற்றவியல் நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் முன் சோதனை செய்வதற்கு தேவையா என்று கேட்டபோது, அதற்கு எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்காமல் நீங்களே சோதனை செய்யும்படி அனுமதி கொடுத்ததின் பேரில், உதவி ஆய்வாளர் எதிரி என்பவரை சோதனை செய்த போது, ஒரு பாலீத்தீன் பையிலிருந்து எதிரி கொடுத்த வைத்திருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்த போது 50 கிராம் அளவு கொண்ட

கஞ்சாவை பச்சை நிறத்தில் ஒருவித நெடியுடன் கூடிய துர்வாசத்தில் இருந்ததை குறித்து கேட்டபோது, அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார். அப்போது உதவி ஆய்வாளர் உரிய காரணம் கூறி, எதிரியை கைது செய்தபோது, எதிரி தான் வைத்திருந்த 50 கிராம் கஞ்சாவை உதவி ஆய்வாளர் அவர்களிடம் எடுத்து கொடுக்க, அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் நாகராஜ் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். எனது கையெழுத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து, எதிரியின் மீது NDPS சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை:**

நான் தாலுக்கா காவல்நிலையத்தில் 3 வருடங்களாக பணியில் இருந்தேன். எனக்கு காவல்நிலையத்தை சுற்றியுள்ள அனைத்து திசைகளும் தெரியும் என்றால் சரிதான். நான் உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில் சம்பவ இடம் சென்றேன். நான் வைத்திருக்கும் பாக்கெட் டைரியில் குறிப்பு வைத்து தான் சென்றேன். உதவி ஆய்வாளர் கொடுத்த உத்தரவு மற்றும் பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்தில் ஆள் நடமாட்டம் இருக்காது. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பொருளை கொளுத்தி பார்த்தோம். நெடி வந்தது. முகர்ந்து பார்த்ததால் கஞ்சாவின் வாசம் வந்ததால் கஞ்சா என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். கஞ்சாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கப்பட்டது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அனைத்து ஆவணங்களும் உயர் அதிகாரி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தார் என்றாலும், உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், கைப்பற்றி இருந்தால் புகைப்படத்தையோ, வீடியோவையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.